
**சபாஷ் போட வைக்கும் சம்பங்கி**



திருச்சி மாவட்டம், துறையூர் தாலூகா, வெங்கடாசலபுரம் கிராமத்தில் சம்பங்கி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் சுந்தர்ராஜ்.

அரை ஏக்கர் சம்பங்கித் தோட்டத்தில் 'நெகிழி மூடாக்கு முறையில் சாகுபடி செய்வதால் ஆள் தேவை வெகுவாக குறைந்திருப்பதோடு செலவும் கட்டுக்குள் இருக்கிறது.

ஆரம்பத்துல ரசாயன உரம், பூச்சிக்கொல்லியெல்லாம் போட்டுதான் செஞ்சோம். அப்ப, இலைச்சுருட்டுப் புழு, வெட்டுக்கிளி, சாறு உறிஞ்சும் பூச்சி, நூற்புழுத் தாக்குதல்னு மாறி மாறி வந்து கிட்டே இருக்கும். விதவிதமான பூச்சிக்கொல்லிகளை வாங்கி அடிச்சுக்கிட்டேதான் இருந்தோம். ஆனாலும், நோய்ங்க கட்டுப்படல. ஒரு கட்டத்துல விதைக்கிழங்கு அழுகி, செடியோட வளர்ச்சி பாதிக்கப்பட்டு, மகசூலே கிடைக்காமப் போயிடுச்சு.

மக்கிய தொழுவுரம், மண்புழு உரம், கடலைப் புண்ணாக்கு, வேப்பம் புண்ணாக்கு, ஆமணக்குப் புண்ணாக்கு போட்டு சாகுபடி செஞ்சேன். பஞ்சகவ்யா, அமுதக்கரைசல் எல்லாம் தயாரிச்சு பயன்படுத்தினேன்.

"இது வீரிய ரச சம்பங்கி. எங்க பகுதியில கோரை (களை) அதிகமாக வரும். அரை ஏக்கர்ல களை எடுக்க வருஷத்துக்கு 25 ஆயிரம் ரூபாய் செலவாகும். மல்ச்சிங் ஷீட் (நெகிழி மூடாக்கு) முறையில சொட்டுநீர் போட்டு சம்பங்கியை சாகுபடி செஞ்சேன். இதோ ஒன்பது மாசம் ஆகியிருக்கு. சுத்தமா களையே இல்ல. மகசூலுக்கும் குறைவில்லை" என்றவர்.

சம்பங்கி அனைத்து மண்ணிலும் நன்றாக வரும். என்றாலும், சரளை கலந்த செம்மண் பூமியாக இருந்தால் அமோக மகசூல்தான் தண்ணீர் தேங்காத, வடிகால் வசதியுடைய நிலத்தில் மட்டுமே சாகுபடி செய்ய வேண்டும். சித்திரை முதல் புரட்டாசி வரை நடவு செய்யலாம். பனிக்காலத்தில் நடவு செய்தால், செடியின் வளர்ச்சி பாதிக்கும்.முதலில் நிலத்தை மூன்று சால் உழவு ஓட்டி, அரை ஏக்கரக்கு அடியுரமாக 20 டன் தொழுவுரம் போட்டு, அதற்கு மேல் ஒரு டன் மண்புழு உரத்துடன் 200 கிலோ எண்ணெய் நீக்காத வேப்பம் பிண்ணாக்கு, 10 கிலோ பாஸ்போபாக்டீரியா, 10 கிலோ அசோஸ்பைரில்லம், 10 கிலா சூடோமோனஸ், 10 கிலோ டிரைக்கோடெர்மாவிரிடி ஆகியவற்றைக் கலந்து தூவி, மீண்டும் இரண்டு சால் உழவு ஓட்ட வேண்டும்.

பிறகு, மூன்றரை அடி அகலம் கொண்ட பார் அமைக்க வேண்டும். உயரம் முக்கால் அடி இருக்க வேண்டும். பாருக்கு பார் ஒன்றரை அடி இடைவெளி தேவை. பாருக்கு மேல் நான்கு அடி அகலமுள்ள நெகிழியை(ஷீட்) விரித்து, அதன் இரு ஓரங்களிலும் கொஞ்சம் மண்ணைப் போட வேண்டும். நெகிழியின் மீது நடுப்பகுதியில் சொட்டுநீர்க்குழாயை அமைக்க வேண்டும்.

இரண்டரை அடி இடைவெளியில் விரிப்பில் துளையிட்டு, மெல்லிய சொட்டுநீர்க் (மைக்ரோ டிரிப்) குழாயை பார் மண் மீது படுமாறு அமைக்க வேண்டும். இதன் மூலம் தண்ணீர் கொடுப்பதால் மண்ணுக்குள் தண்ணீர் இறங்கி, எப்போதும் ஈரம் இருந்து கொண்டே இருக்கும். செடிக்கும் முழுமையான தண்ணீர் கிடைக்கும்.

பார் ஈரமாக இருக்கும்போதே, அதன் இரண்டு ஒரங்களிலும் இரண்டு அடி இடைவெளியில் வரிசையாக நான்கு சென்டி மீட்டர் அளவுக்கு, பெருக்கல் குறியீடு போல பிளேடால் கீறிவிட்டு, சம்பங்கி விதைக்கிழங்கை நடவேண்டும். அரை ஏக்கருக்கு 125 கிலோ விதைக்கிழங்கு தேவைப்படும்.

விதைக்கிழங்கின் கூர்மையான, வெள்ளைப்பகுதி மேற்புறம் இருக்கு மாறு நடவு செய்ய வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை 100 லிட்டர் அமுதக்கரைசலை சொட்டுநீர் உரடேங்க் மூலமாக கொடுக்கலாம். 15 நாட்களுக்கு ஒருமுறை 2 லிட்டர் பஞ்சகவ்யாவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பயிர் வளர்ச்சி ஊக்கி மற்றும பூக்களின் செழுமைக்காக கொள்ளு, மொச்சை, தட்டைப்பயறு, பாசிப்பயறு, கொண்டைக்கடலை, சோயாபீன்ஸ் ஆகியவற்றை தலா 250 எடுத்து ஒன்றாகக் கலந்து, ஒரு நாள் முழுவதும் தண்ணீரில் ஊற வைத்து, மெல்லியத் துணியில் கட்டி வைத்தால் முளை விடும் இவற்றை கிரைண்டரில் நன்கு அரைத்து, 10

லிட்டர் பங்சகவ்யாவில் ஊறவைத்தால், இரண்டு நாட்களில் நொதிக்கும். இதனை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து, தெளிக்க வேண்டும். இப்படி இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை தெளிப்பது அவசியம். இதேபோல இரண்டு லிட்டர் பழக்கரைசலை, 250 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

பூச்சித்தாக்குதல் இருந்தால், இரண்டரை லிட்டர் மூலிகைப் பூச்சி விரட்டியை, 50 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக் வேண்டும். நூற்புழுவைக் கட்டுப்படுத்த, இரண்டு பார்களக்கு நடுவில், 6 அடிக்கு ஒரு செண்டுமல்லிப் பூ நாற்றை நடவு செய்ய வேண்டும். இதை, மார்கழியில் நடவு செய்து, சித்திரையில் வேரோடு அப்புறப்படுத்த வேண்டும்.

நெகிழி மூடாக்கு, பார்களின் மீது சூரியஒளி படாதவாறு முழுமையாகத் தடுப்பதால் களையே இருக்காது. இரு பார்களுக்கு நடுவில் உள்ள பகுதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக லேசாக களை வந்தால், உடனே அகற்றிவிடலாம்.

50 கிலோ மண்புழு உரத்தோடு, தலா இரண்டு கிலோ பாஸ்போபாக்டீரியா, அசோஸ்பைரில்லம், டிரைக்கோடெர்மாவிரிடி ஆகியவற்றைக் கலந்து, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பார்களில் தூவ வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 25 கிலோ கடலைப் பிண்ணாக்கும், இரண்டு மாதங்களக்கு ஒரு முறை 40 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கும் தூவ வேண்டும். ஆண்டுக்கு ஒரு மறை ஒரு டன் மண்புழு உரத்தையும், 200 கிலோ வேப்பம் பிண்ணாக்கையும் பார்களில் தூவ வேண்டும். நெகிழி மூடாக்கு ஷீட்டை லேசாக கையால் தூக்கிக் கொண்டு, இந்த உரங்களைத் தூவி விடலாம்.

தினசரி வருமானம்

நடவிலிருந்து 90-ம் நாள் அறுவடையைத் தொடங்கலாம். சராசரியாக தினமும் 23 கிலோ மகசூல் கிடைக்கும். முதல் ஆண்டு முடிவில் மொத்த மகசூலாக 6,210 கிலோ கிடைக்கும். இரண்டாவது ஆண்டு 8,280 கிலோ, மூன்றாவது ஆண்டில் 8,640, நான்காவது ஆண்டில் 9,000 கிலோ என மகசூல் உயரும். அதன்பிறகு, படிப்படியாக குறையத் தொடங்கும்.

ஒரு கிலோ குறைந்தபட்சம் 30 ரூபாயிலிருந்து, அதிகபட்சமாக 400 ரூபாய் வரை விலை போகும். இந்த விலையை விசேஷ காலத்துல எதிர்ப்பார்க்கலாம். பெரும்பாலான சமயங்கள்ல சராசரியா 40 ரூபாய் கிடைக்கும்.

“எங்க பகுதியில அரை ஏக்கர்ல களையெடுக்கறதுக்கு வருஷத்துக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் செலவு செய்ய வேண்டியிருக்கு. ஆனா, மூடாக்கு விரிப்பு போக 15 ஆயிரம் ரூபாய்தான் செலவு. இது களைகளைக் கட்டுப்படுத்தறதோட செடிகளையும் செழிப்பாவெச்சுருக்கு கூடவே, சொட்டுநீர் போட்டோம்னா கவலையில்லாம இருக்கலாம். இதுக்கு 13 ஆயிரம் ரூபாய் செலவாகும். நான் சொட்டுநீர், தெளிப்புநீர் ரெண்டு முறையையும் அமைச்சுருக்கேன் சம்பங்கி சாகுபடிக்கு இதுபோல் மூடாக்கு விரிப்பும், சொட்டுநீர் பாசனமும் அமைச்சுட்டா பல வருஷத்துக்கு கவலையே இல்லை.

“முழுக்க இயற்கை முறையில விளையறதால எங்களோட சம்பங்கி பறிச்சப் பிறகும், பல மணிநேரம் மொட்டாகவே இருக்கும். இரண்டு நாட்கள் வரைக்கும், வாடாமல் அதிக வாசனையா இருக்கு. இரண்டு நாட்கள் வரைக்கும், வாடாமல் அதிக வாசனையா இருக்கு. இதனால இயற்கை சம்பங்கிக்கு சந்தையில எப்பவுமே கிராக்கிதான்”.

**தொடர்புக்கு**

சுந்தர்ராஜ்

வெங்கடாசலபுரம், துறையூர் தாலூகா

திருச்சி மாவட்டம்,அலைபேசி : 98432-47106